# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அனைத்துலகத் தேர்வு

# 2012

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 10

நேரம்: 180 மணித்துளிகள்

சுட்டெண்: | | | | | | | | |

மொத்தப்புள்ளிகள் : 100

## 1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய எழுத்தின் கூட்டில் புள்ளடி இடுக.

1. எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண்கீழ்க்கணக்கு என்பவை

அ) கழக இலக்கியங்கள்　ஆ) சோழர் கால இலக்கியங்கள்
இ) தற்கால இலக்கியங்கள்　ஈ) நாயக்கர் கால இலக்கியங்கள்

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

2. சார் பெழுத்துகள்

அ) 216　ஆ) 217　இ) 247　ஈ) 30

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

3. புறநானூறு என்பதில் புறம் என்பது

அ) வீரம்　ஆ) காதல்　இ) அறிவு　ஈ) கல்வி

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

4. பாணன் என்பவன்

அ) இசைக்குல ஆண்　ஆ) இசைக்குலப் பெண்
இ) இடைக்குல ஆண்　ஈ) இடைக்குலப் பெண்

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

5. வில்லுப்பாட்டுக் குழுவின் தலைவரை இப்படி அழைப்பர்.
என வழங்கப்படும்,

அ) அண்ணாவியார்　ஆ) அன்னாவியார்
இ) பாடினியார்　ஈ) முதலியார்

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

6. கோவலன், கண்ணகி கதையைச் செங்குட்டுவனுக்குக் கூறியவர்

அ) கயபாகு　ஆ) தண்டமிழ்ச்சாத்தனார்
இ) குடிமக்கள்　ஈ) கனக விசயன்

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

7. இளவேனில் என்பது

அ) மழை காலம்　ஆ) வசந்த காலம்
இ) வரண்ட காலம்　ஈ) இருண்ட காலம்

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

8. 'பொற்கிழி' என்பது

அ) பறவை ஆ) பொன்முடிப்பு இ) பொற்காப்பு ஈ) பொற்றாலி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

9. 'தமிழ்மேல் ஆணை' என்ற பாடலைப் பாடியவர்

அ) தேசிய விநாயகம்பிள்ளை ஆ) காசி ஆனந்தன்
இ) சின்னத்தம்பிப்புலவர் ஈ) பாவேந்தர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

10. குமரிக்கண்டம் கடலில் மூழ்கிய செய்தியைக் கூறுவது

அ) ஆபுத்திரன் கதை ஆ) நோவாவின் கதை
இ) இராவண காவியம் ஈ) தென்னாலியின் கதை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

11. 'மொழிஞாயிறு' என அழைக்கப்பட்டவர்.

அ) தனிநாயகம்அடிகள் ஆ) விபுலாநந்தஅடிகள்

இ) தேவநேயப்பாவாணர் ஈ) இளங்கோவடிகள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

12. பின்வருவனவற்றுள் கரணியப் பெயர்

அ) மரம் ஆ) காற்று இ) மண்வெட்டி ஈ) வான்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

13. 'அச்சம் என்பது மடமையடா' என்று தொடங்கும் பாடலைப் பாடியவர்

அ) கண்ணதாசன் ஆ) பாரதியார்
இ) காசி ஆனந்தன் ஈ) மகாகவி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

14. பின்வருவனவற்றுள் செயப்படு பொருள் குன்றிய வினை

அ) சாப்பிடு ஆ) வெட்டு இ) எழுது ஈ) அழு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

15. முன்னாளில் இந்தியா இவ்வாறு அழைக்கப்பட்டது.

அ) இலங்கை ஆ) குமரிக் கண்டம்
இ) நாவலந்தீவு ஈ) மணிபல்லவம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

16. ‘தன்னிலையில் தாழாமையும், தாழ்வுவரின் உயிர் வாழாமையும்’

அ) மானம் ஆ) தாழ்வு இ) பெருமை ஈ) புகழ்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

17. கால்வாய் என்ற சொல்

அ) மரூஉ ஆ) தகுதிவழக்கு
இ) இலக்கணப் போலி ஈ) மங்கலவழக்கு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

18. இலங்கையை இறுதியாக ஆண்ட ஐரோப்பியர்

அ) ஒல்லாந்தர் ஆ) சீனர் இ) போர்த்துக்கேயர் ஈ) ஆங்கிலேயர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

19. ‘நீ பார்த்தேன்’ என்பது

அ) பால் வழு ஆ) இட வழு இ) வினா வழு ஈ) திணை வழு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

20. வாட்படை என்பதைப் பிரித்து எழுதினால்

அ) வாட்+ படை ஆ) வாள் + படை
இ) வால் + படை ஈ) வாழ் + படை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

21. ஒவ்வொரு தமிழ்ச் சொல்லுக்கும் வேர்ச்சொல் கண்டவர்

அ) தேவநேயப்பாவாணர் ஆ) தொல்காப்பியர்
இ) தனிநாயகம்அடிகள் ஈ) வீரமாமுனிவர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

22. கடிநாய் என்பது

அ) பண்புத்தொகை ஆ) வேற்றுமைத்தொகை
இ) உம்மைத்தொகை ஈ) வினைத்தொகை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

23. பின்வருவனவற்றுள் மயக்க ஒலிகள்

அ) ல ள ழ ஆ) ம ள ழ இ) ட ள ழ ஈ) ஞ ச ழ

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

24. வில்லுப்பாட்டுக் குழுவில் இடம்பெறுவோரின் எண்ணிக்கை

அ) ஐவர் ஆ) மூவர் இ) எழுவர் ஈ) பதின்மர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

25. "வெள்ளம் வருமுன் அணைகட்ட வேண்டும்" என்ற பழமொழி குறிப்பது.

அ) அமைதியின் வெற்றி ஆ) அறம் செய்
இ) வீண் பெருமை ஈ) முன்னேற்பாடு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

26. பின்வருவனவற்றுள் குற்றியலுகரம்

அ) எள்ளு ஆ) பயறு இ) ஒரு ஈ) வழு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

27. பின்வருவனவற்றுள் ஏவல்ச் சொல்லியம்

அ) நீங்கள் என்ன செய்கிறீர்கள்? ஆ) இன்று மழை பெய்யவில்லை.
இ) தீமை ஒழிக! ஈ) பெரியோர் சொற்கேள்.

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

28. நெற்றிக் கண்ணைக் காட்டிலும் குற்றம் குற்றமே எனக்கூறியவர்

அ) இறைவன் ஆ) நக்கீரர் இ) தருமி ஈ) அரசன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

29. சிறப்புக் கரணியம் கருதி ஒரு சொல்லையோ தொடரையோ குறித்துக்காட்டப் பயன்படும் நிறுத்தற்குறி

அ) இரட்டைமேற்கோட்குறி ஆ) வியப்புக்குறி
இ) வினாக்குறி ஈ) ஒற்றைமேற்கோட்குறி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

30. மலையும் மலைசார்ந்த இடமும்

அ) நெய்தல் ஆ) பாலை
இ) மருதம் ஈ) குறிஞ்சி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

(புள்ளிகள் 30)

## 2) பாடநூல் வினா - ஏழில் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

1. கழககாலத் தமிழரின் வாழ்க்கை முறை எதையொட்டியிருந்தது?

2. குறள் : மயிர்நீப்பின் வாழாக் கவரிமா வன்னா

ருயிர்நீப்பர் மானம் வரின். இக்குறளின் பொருளைத் தருக.

3. "தமிழ்மேல் ஆணை" என்ற பாடம் எவ்வுணர்வை வெளிப்படுத்துகின்றது?

4. எதற்காகச் செங்குட்டுவன் இமயத்தில் கல்லெடுக்கச் சென்றான்?

5. குமரிக்கண்டம் கடலில் மூழ்கிய செய்தியைக்கூறும் நூல்களில் இரண்டின் பெயர்களைக் தருக.

6. தமிழர் புலம்பெயர்ந்ததற்கான கரணியங்கள் இரண்டு தருக.

7. பின்வரும் சொற்களுக்குப் பொருள் தருக.

புனல் ______________ கானகம் ______________

ஞாலம் ______________ பரிதி______________

(புள்ளிகள் 10)

## 3) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

மீனவர் மீன் பிடிக்கக் கடலுக்குச் செல்லும் போது ஒவ்வொரு தடவையும் உயிரோடு திரும்புவோமா என்ற ஐயத்தோடுதான் செல்வார்கள். இவர்கள் கடலில் நெடுந்தூரம் சென்றே மீன்பிடிக்க வேண்டும். மீன்பிடித்து வீடு திரும்ப நினைக்கும் போது சொல்லிவைத்தாற்போல் வானமே இருண்டு விடும். புயல் வீசத் தொடங்கும். இச்சூழ்நிலையில் மீனவர்கள் திசை தெரியாமல் திண்டாடுவர் . எப்படியாவது வீடு திரும்ப வேண்டும் என்ற நோக்கில் படகை விரைவாக ஓட்டுவர் . ஆனால் அவர்கள் வேறு திசைக்குப் போய் விடுவார்கள். தங்கள் ஊர் இருக்கும் திசையை அவர்களால் கண்டுகொள்ள முடிவதில்லை.

இத்தகைய துன்பநிலை மீனவர்களுக்குத் தொடர்ந்தது. ஒருமுறை சிறுவன் ஒருவன் கடற்கரையிலிருந்து வானத்தை அண்ணார்ந்து பார்த்தான். சில காகங்கள் கடலுக்கு மேலால் நிலத்தை நோக்கிப் பறந்து வந்து கொண்டிருப்பதைக் கண்டான். நாளை புயற்காற்று வரும் என ஒரு பெரியவர் கூறியது அவன் காதில் விழுந்தது. தந்தையுடன் அவன் கடற்றொழிலுக்குச் செல்லப் புறப்பட்டான். கையில் ஒரு கூடையை வைத்திருந்தான். தந்தையும் ஏனையோரும் " அந்தக் கூடையில் என்ன இருக்கிறது"? எனக் கேட்டனர். அவன் விடை கூற மறுத்துவிட்டான். பின்னர் மீன்பிடித்து முடிந்ததும் வீடுதிரும்ப நினைத்தனர். வழமைபோல் புயற்காற்று, மழை படகு திசைமாறியது. என்ன செய்வது என அனைவரும் வருந்தினர் . சிறுவன் தன் கூடையைத் திறந்துவிட்டான். அதற்குள் இருந்த காகம் பறந்து போனது. காகம் பறந்த திசையை நோக்கிக் கப்பலைச் செலுத்தச் சொன்னான். ஊர் வந்தது. அனைவரும் சிறுவனைப் பாராட்டினர் . அவன் கூறினான் "நான் உங்களுக்கு வழிகாட்டவில்லை. காகம் தான் உங்கள் வழிகாட்டி." திசையறிகருவி கண்டுபிடிக்கும் வரையும் காக்கை பிடித்து அடைக்கும் வழக்கத்தை மீனவர் தொடர்ந்தனர் . பல கப்பல்களில் திசை பார்க்க உதவும் இடம் 'காக்கைக் கூடு' (crows nest) என அழைக்கப்பட்டது.

1. முன்னர் மீனவர்களுக்கு இருந்த துன்பநிலை யாது?

2. இங்கு கூறப்பட்டுள்ள தொழில் யாது?

3. சிறுவன் யாருடன் கடற்றொழிலுக்குச் சென்றான்?

4. திசையறிகருவி கண்டுபிடிக்க முன்னர் மீனவர்களுக்கு வழிகாட்டியாக இருந்தது எது?

5. கப்பல்களில் திசை பார்க்க உதவும் இடம் எவ்வாறு அழைக்கப்பட்டது?

(புள்ளிகள் 10)

## 4) பாடலை வாசித்து; வினாக்களுக்கு முழுவிடை தருக.

*எத்தனைநாள் துயின்றிருப்பாய் என்னருமைத் தாய்நாடே!*

*வல்லரக்கர் சினங்கண்டு வால்மடக்கும் நாயெனவே*
*புல்லருக்கும் அஞ்சாதே! புரிபோர் நீ நிமிர் தலையை!*

*தன்னுயிரே போயிடினும் தன்மானங் காத்திடுக!*
*என்னைப்போல் பெரியவன் யார் இறுமாப்புப் போக்கிடுக!*

*வானுலகம் ஈந்திடினும் வாணிகமோ விடுதலையும்*
*தானுலகில் வாழ்வதற்காய் தனைவிற்கும் கீழ்மகனை*

*சீயெனவே உமிழ்ந்துவிடு திருவோடு தூக்கிடினும்*
*நீயென்றும் உரிமைபெற நிலையாகப் போரிடுக.*

*நெஞ்சுதனில் உரங்கொண்டு நேர் நிற்கும் ஆண்மகனை*
*கொஞ்சமும் அசைக்காது கொடுமூழிப் பெருவலியும்*

*உன்னண்டை வயற்காரன் உன்வயலில் உள்நுழைந்து*
*தன்னெல்லை பெருக்குவதைத் தானறிந்தும் தூங்குவதோ?*

1. இப்பாடலில் யாருக்கு அஞ்சாதே எனக்கூறப்படுகின்றது?

______________________________________________

______________________________________________

2. தன்மானத்தை எதனிலும் உயர்வாகக் கருத வேண்டும்?

______________________________________________

______________________________________________

3. பெருவலி யாரை அசைக்காது?

______________________________________________

______________________________________________

4. யாரை சீயெனவே உமிழ்ந்துவிடு எனக் கூறுகின்றார் ?

______________________________________________

______________________________________________

5. எதைப் போக்கிடுக என்று கவிஞர் கூறுகின்றார்?

______________________________________________

______________________________________________

(புள்ளிகள் 10)

## 5) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.

1. தொகைகள் எத்தனை வகைப்படும்? பண்புத்தொகைக்கு எடுத்துக் காட்டுத் தருக.

2. எதிர்கால இடைநிலைகள் எவை? ஒவ்வொன்றிற்கும் எடுத்துக்காட்டுகள் தருக.

3. செயப்படுபொருள் குன்றிய வினைக்கு மூன்று எடுத்துக்காட்டுகள் தருக

4. சொல்லிய உறுப்புகள் அனைத்தும் அமையுமாறு சொல்லியம் ஒன்று தருக.

5. பொதுமொழிக்கு இரண்டு எடுத்துக்காட்டுகள் தருக?

(புள்ளிகள் 15)

## 6. தரப்பட்டுள்ள பந்தியைத் தமிழ்மொழியில் மாற்றி எழுதுக.

Every one uses a computer these days. computer is an important part of our life, nowadays. Children use computers at school for their education. We can send and receive as many emails as we wish via the internet . It is very fast and is of no extra cost to send as many emails to anyone. People say that this is a small world because internet brings us together. We can read news and weather forecasts in the internet. Furthermore we can watch films and listen to music in it.We can stay in our homes comfortably and see the world . Information technology has brought this facility to the people of this planet.

Iedereen gebruikt nu een computer. Dit neemt een belangrijke plaats in ons leven. Kinderen gebruiken op school voor hun studie de computer. We kunnen via internet veel mailen en mails ontvangen. Maakt niet uit hoeveel mails je stuurt naar iemand, maar je kunt het heel snel en goedkoop sturen. Doordat internet ons allemaal bijeen brengt is de wereld kleiner geworden zegt men. We kunnen op internet het nieuws, het weer en voorspellingen lezen. En we kunnen naast het film kijken ook muziek luisteren. Vanuit ons huis is het mogelijk om de wereld te bekijken. De technologie om informatie te verspreiden heeft deze mogelijkheid gegeven aan de mensen op deze wereld.

Alle bruker datamaskiner(PC) idag. Dette spiller en viktig rolle i våre liv. Barn bruker datamaskiner på skolen til utdanning. Vi kan bruke internett for å sende og motta epost. Vi kan sende mange epost til andre uten noen ekstrakostnader. Siden internett fungerer som et bindeledd sier mange at verden stadig blir mindre. På internett kan vi lese nyheter og værmelding. I tillegg til dette kan vi se på film og høre på musikk. Vi kan se verden hjemmefra. Kommunikasjonsteknologien har gitt denne muligheten til verdensbefolkningen.

Jeder benutzt heutzutage einen Computer. In unserem Leben spielt es eine unverzichtbare Rolle. Die Kinder benutzen den Computer um ihre Schulaufgaben zu erledigen. Durch die Nutzung vom Internet ist es möglich, E-Mails zu senden und zu empfangen. Man kann mehrere E-Mails gleichzeitig und sogar kostenlos verschicken. Da das Internet uns alle vereint, ist die Welt ein Stück kleiner geworden. Im Internet können wir uns über die Nachrichten sowie Wettervorhersagen erkundigen. Außerdem können wir uns Filme anschauen und sogar Musik hören. Von zu Hause aus können wir raus auf die Welt schauen. Diese Möglichkeit hat uns die Medientechnology geliefert.

Alle bruger computer nu. Nu er den en vigtig del af vores liv. Børnene bruger computer til deres undervisning i skolen. Vi kan via internet både sende masse e-mails og modtage. Vi kan hurtig sende masse e-mail og oveni noget andet til en. Internet forbinder os alle, derfor siger mennesker/befolkning at verden er blevet lille. Vi kan på internettet læse både nyhederne vejre informationer/(forudsigelser). Oveni kan vi se filme og høre musik. Vi kan sidde og se verden fra hjemmet/ (fra hjemmet kan vi sidde og se verden). Informationsteknologi giver denne mulighed til verden/jorden mennesker/befolkning.

Adesso tutti fanno uso del computer. Infatti adesso svolge un ruolo importante nella vita di tutti noi. I bambini usano il computer per motivi di studio. Noi tramite il computer possiamo mandare e ricevere posta elettronica(mail). Possiamo mandare molto velocemente e quante ne vogliamo senza spendere tanti soldi. Internet ci mette tutti in contatto e le persone sostengono che il mondo è fatto piccolo a causa di ciò. Su internet possiamo leggere notizie,le previsioni meteorologiche, inoltre possiamo guardare film e ascoltare musica. Da casa possiamo osservare il mondo. La tecnologia ha permesso di entrare in contatto alle persone di tutto il mondo

L'informatique est utilisé par une grande majorité. Ceci est un besoin de la vie de tous les jours. Dès leur plus jeune âge, les enfants apprennent l'informatique et grâce à internet nous nous communiquons à travers des courriers éléctrononiques. Le courrier éléctronique est un moyen très rapide pour communiquer, pour informer quelque chose, sans aucune dépense. On dit qu' Internet a réduit le monde car au jour le jour nous pouvons communiquer à l'autre coté du monde. Nous pouvons regarder l'actualité, la météo, les informations, tout type de films, écouter des chansons via internet. Le monde s'est développé, à un degré où nous pouvons voir la terre entière tout en étant à la maison. La nouvelle technologie est une opportunité pour le monde d'aujourd'hui.

Nu för tiden använder alla datorn. Det är ett av dem viktigaste resurserna i våra liv. Elever använder datorn till sina studier i skolan. Vi kan via Internet skicka flera brev och ta emot brev. Vi kan skicka hur mycket som helst till en person, snabbt och utan extra kostnader. Internet skapar en gemenskap och därför säger människor att världen har blivit mindre. Nyheter och väder prognoser kan vi läsa på Internet. Vi kan till och med kolla på film och lyssna på musik. Vi kan se världen hemifrån. Den här resursen har gett människan en ny chans att dela information med varandra.

____________________________________________________________

(புள்ளிகள் 05)

**7) கீழுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து 250 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- மானம் பற்றி திருவள்ளுவர் கூறியதைத் தொகுத்துக் கூறுக.
- சேரமான் வஞ்சினம் என்ற பாடத்தினை உமது உரைநடையில் கதையாக எழுதுக.
- சூழல் மாசடைவதால் ஏற்படும் விளைவுகள்

(புள்ளிகள் 20)